புதல்வர்களையும் அகலாத செல்வத்தையும் பெற்று ஸ்ரீ கிருஷ்ணனின் பக்தர்களில் சிறந்தவனாக பாக்கிய சாலியாக ஆவான்.

டோலா நவரத்னமாலிகா முற்றிற்று

शिवाभ्यां नमः

## १५. गङ्गाष्टकम्

## 15. கங்காஷ்டகம்

ஸ்ரீதர அய்யவாள் தன் வீட்டுக்கிணற்றில் கங்கை தோன்றும்படி சிவபெருமானிடம் வேண்டினார். பித்ருக்களின் சிராத்ததினத்தன்று சிராத்தத்திற்காகப் பக்குவப்படுத்தியிருந்த உணவைக் கடும்பசியால் வாடி உணவு தர வேண்டிய சாம்பானுக்கு உணவிட்டமையால் சிராத்தம் வீணாக நேர்ந்தது. அதைத் தவிர்க்க சிராத்தத்தில் பங்கு பெற வரிக்கப்பட்ட பெரியோர்கள் கங்கையில் நீராடுதலைப் பரிஹாரமாகக் கூறினர். அந்நிலையில் அன்று கங்கைக்குச் சென்று நீராடிப்பின் சிராத்தம் செய்வது நடவாததொன்று. ஸ்ரீதரர் சிவனை வேண்ட சிவனது அருளால் கங்கை வீட்டுக்கிணற்றில் பொங்கி வந்தாள். அதில் நீராடி ஸ்ரீதரர் தூய்மை பெற்று பித்ருக்களுக்கான சிராத்தம் செய்தார் என்பர். அந்நிலையில் ஸ்ரீதரர் சிவனை வேண்டுவதும் உடன் அவரருளால் கங்கை தோன்றியதும் இந்தத்துதியில் இடம் பெறுகின்றன.

**शम्भो भवन्नामनिरन्तरानुसन्धानभाग्येन भवन्तमेव ।**
**यद्येष सर्वत्र तथाऽन्त्यजेऽद्य पश्यत्यहो कोऽत्र कृतोऽपराधः ॥**

சம்புவே! உமது திருநாமத்தை இடைவிடாமல் உள்ளத்தில் நினைப்பதனால் பெற்ற பாக்யத்தால் உம்மையே எல்லாவற்றிலும்- இன்று இந்த கடைப்பிறப்போனிடமும் இவன் காண்கிறான். இதில் ஏது தவறு? (1)

**अस्त्वेष मन्तुः पितृयज्ञनिष्ठे गङ्गाप्लवो यो विहितोऽपचित्यै ।**
**दूरात्तु तन्नामजपेन शुद्धिर्न स्यात् कथं मे स्मृतिरर्थवादः ॥ २**

*பித்ருக்களுக்கான வேள்வியில் முனைந்திருந்தவனுக்கு இது குற்றமாகலாம். இதற்குக் கழுவாயாக கங்கையில் நீராடல் விதிக்கப்பட்டுள்ளது. அதுவெகுதூரத்தில் உள்ளது. கங்கையின் நாம ஜபத்தால் சுத்தி கிடைக்காதா? "கங்கா கங்கேதி யோ ப்ரூயாத் யோஜநாநாம் சதைரபி. முச்யதே ஸர்வபாபேப்ப்ய:" கங்கை கங்கை என்ற நாம ஜபம் செய்பவன் நூற்றுக்கணக்கான யோஜனை தூரத்திற்கு அப்பாலிருந்தாலும் பாபங்களிலிருந்து விடுபடுகிறான் என்ற ஸ்மிருதிவாக்கியம் என்னளவில் விளம்பரச் செய்தி தானா? (2)*

**त्वन्नामनिष्ठा न हि तावती मे श्रद्धा यतः कर्मसु न प्रदग्धा ।**
**त्रैशङ्कवं मे पशुपान्तरायो मुच्येय तस्मात्कथमार्तबन्धो ।। ३**

*எளியவரின் உற்றாரே! பசுபதியே! உன் நாமத்தை மட்டும் நம்பியிருக்கிற நிலை எனக்கு இல்லை. கருமங்கள் செய்வதில் உள்ள சிரத்தை சிறிதும் குறையவில்லை. இந்த இரண்டும் கெட்டான்-திரிசங்கு நிலை எனக்கு இடையூறு விளைவிக்கிறது. இதிலிருந்து நான் எப்படி விடுபடுவேன்? (நாமம் கூறினால் பாபம் போகும் என்ற சிரத்தை ஒரு புறம். சாம்பானுக்கு உணவிட்டது பெரும் பாபம், கங்கை நீரால் தான் அது அகலும் என்பதால், கங்கையில் நீராடாமல் சிராத்தம் செய்வது வீண் என்ற எண்ணம் ஒரு புறம். எது சரி? இந்த இருதலைக்கொள்ளி நிலை என்று அகலும்?) (3)*

**यद्यद्य ते श्राद्धविनष्टिरिष्टा कोऽहं ततोऽन्यच्चरितुं समर्थः ।**
**श्राद्धे वृताः पूर्वदिनोपवासाः नान्यत्र भुञ्जीयुरिदं तु खिद्ये ।।४**

*இன்று சிராத்தம் செய்வது வீண் எனில் வேறு என்ன செய்வேன்? சிராத்தத்தில் பங்கு பெற வரிக்கப் பெற்றவர்கள் நேற்று முதல் உபவாஸத்தில் உள்ளனர். வேறு இடத்தில் சாப்பிடமாட்டார்கள். இதனால் வேதனைப்படுகிறேன். (4)*

**श्रद्धालवः श्राद्धविघातभीत्या स्वात्मोपरोधं विगणय्य धीराः ।**
**यत्प्रोचुरत्रापचितिं महान्तः तत्रोचितं यद्दयया विधेहि ।। ५**

*(சிராத்தத்திற்கு வரிக்கப்பட்ட) பெரியோர்கள் தனக்கு நேர்கிற கஷ்டத்தைப் பெரிதாகக் கருதாமல், சிராத்தம் தடைபெறுமே என்று பயந்து சிரத்தையுடன் அதற்கான கழுவாயைக் கூறியுள்ளனர். இங்கு உசிதமானதைத்தயையுடன் செய்வீர் (5)*

**गङ्गाधर त्वद्भजनान्तरायभीत्या गृहे कूपकृतावगाहः ।**
**जाने न तीर्थान्तरमद्य गङ्गामासादयेयं कथमार्तबन्धो ॥ ६**

*கங்கையைத் தரிப்பவரே! உமது வழிபாட்டிற்கு இடையூறு என்று பயத்தால் இதுவரை கிணற்று நீரில் நீராடுகிறேன். வேறு தீர்த்தங்களை அறியேன். எளியவருக்கு உறவினரே! இன்று கங்கையை எவ்வாறு சென்றடைவேன்?*

**नाहं तपस्वी सगरान्ववायो जाने न जह्नुश्चरति क वेति ।**
**शम्भो जटाजूटमपावृणुष्वेत्यभ्यर्थने नालमयं वराकः ॥ ७**

*நான் ஸகரர்வம்சத்தில் பிறந்தவனுமல்ல; தவம் செய்பவனுமல்ல. ஜந்ஹு முனிவர் எங்கு உலாவுகிறார் என்பதும் தெரியாது. ''சம்புவே! உமது சடை முடிப்பைப் பிரித்துவிடுவீர் (கங்கை வெளியேறட்டும்) என்று வேண்ட எனக்குத் தகுதி இல்லை. (7)*

**गङ्गाधराख्या गतिरत्र नान्या तामाश्रये सङ्कटमोचनाय ।**
**हन्त प्रवाहः कथमत्र कूपे विस्फूर्जतीशः खलु मे प्रसन्नः ॥ ८**

*கங்காதரர் என்ற பெயரே இன்று கதி. வேறில்லை. சங்கடத்திலிருந்து விடுபட அந்தப் பெயரைப்புகலடைகிறேன். ஆஹா! கிணற்றில் பிரவாஹம் காண்கிறதே! அது எப்படி! எனக்கு அருள் புரிகிற ஈசன் கிண்ற்றில் துடிப்புடன் வெளிப்படுகிறார். (8)*

**गङ्गेति गङ्गेति हरेति गृह्णन् आप्लावितोऽहं दयया पुरारेः ।**
**कूपोत्थितोऽयं करुणाप्रवाहः गाङ्गश्चिरायात्र जनान् पुनातु ॥९**

*கங்கே! கங்கே! ஹர! என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே இதோ புரஹரனின் கருணையால் நீராட்டப்பெற்றேன்.*

சிவனது கிருபையால் தோன்றிய இந்த கங்கைப் பெருக்கு பல்லாண்டுகளுக்கு இங்கு மக்களுக்குத் தூய்மை அளிக்கட்டும். (9)

கங்காஷ்டகம் முற்றிற்று

शिवाभ्यां नमः

## १६. श्री सुब्रह्मण्यपञ्चरत्नम्

## 16. ஸ்ரீ ஸுப்ரம்ஹண்யபஞ்ச ரத்னம்.

श्रुतिशतनुतरत्नं शुद्धसत्त्वैकरत्नं
यतिहितकररत्नं यज्ञसंभाव्यरत्नम्।
दितिसुतरिपुरत्नं देवसेनेशरत्नं
जितरतिपतिरत्नं चिन्तये स्कन्दरत्नम्॥ १

ஸ்கந்தர் என்ற ரத்தினம், நூற்றுக் கணக்கான வேதவாக்கியங்களால் துதிக்கப் பெற்றது. குணநிலைக்கு வராத சுத்தஸத்வம் மட்டுமே உருவானது. துறவிகளுக்கு இதம் புரிவது. வேள்விகளில் முக்கிய ஸ்தானத்தில் மதிப்பு பெறுவது, அஸுரர்களுக்கு எதிரி, தேவஸேனையின் கணவர் (தேவர்களின் சேனைத்தலைவர்) மன்மதனை வென்ற அழகர். அவரை தியானிக்கிறேன். (1)

सुरमुखपतिरत्नं सूक्ष्मबोधैकरत्नं
परमसुखदरत्नं पार्वतीसूनुरत्नम्।
शरवणभवरत्नं शत्रुसंहाररत्नं
स्मरहरसुतरत्नं चिन्तये स्कन्दरत्नम्॥ २

தேவர்கள் முதலானோரின் தலைவர், நுண்ணறிவின் ஒரே உருவம், பேரின்பமளிப்பவர், பார்வதியின் மகன், சரவணப் பொய்கையில் தோன்றியவர். எதிரிகளை அழிப்பவர். மன்மதனை அழித்தவரின் மகன். அந்த ஸ்கந்தர் என்ற ரத்தினத்தைத் தியானிக்கிறேன்.(2)

निधिपतिहितरत्नं निश्चिताद्वैतरत्नं
मधुरचरितरत्नं मानिताङ्घ्र्यब्जरत्नम्।